அத்யாபன ஸமுபகார ஸமிதிய
கல்வி கூட்டுறவுச் சங்கம்
Education Co-operative Society

# சட்டத்தரணிகள் மற்றும் மதிப்பீட்டாளர்களை பதிவு செய்தல் – 2027

நாட்டில் கல்வித் துறையில் சேவையாற்றும் 226,000 அளவான அங்கத்துவத்தைப் பெற்றிருக்கும் கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் செயற்படுத்தப்படும் ஆதன கடன் திட்டத்தின் கீழ் கடனுக்கு விண்ணப்பிக்கும் உறுப்பினர்களின் ஆதன பிணையின் கீழ் கடன் கோரும் உறுப்பினர்களின் ஆதணங்களை பிணையாக வைத்து கடன் வழங்கப்படும்.

அந்த ஆதனங்களுக்கு தொடர்புடைய உரிமை அறிக்கை, மதிப்பீட்டு அறிக்கையை பெறுதல், ஆதன கடன் கோப்பை பரீட்சித்து கடன் வழங்கும் தகுதியை உறுதி செய்தல் மற்றும் அடகு மற்றும் விற்பனைப் பத்திரம் எழுதுதலுக்காக கீழுள்ள தகைமையை பூர்த்தி செய்திருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் மதிப்பீட்டாளர்களை பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- உரிமை அறிக்கை/ கடன் பெற்றுக்கொடுத்தல் தகைமையை உறுதி செய்தல் மற்றும் விற்பனைப் பத்திரம் எழுதுதல்:-

  நொத்தாரிசு உரிமம் பெற்ற சட்டத்தரணி ஒருவராக குறைந்தது 10 ஆண்டுகள் சிவில் நீதிமன்றம் மற்றும் நொத்தாரிசு செயற்பாடுகள் தொடர்பில் அனுபவம்.

- மதிப்பீட்டு அறிக்கை:-

  1975 இன் 33 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மதிப்பீட்டாளர்களின் நிறுவனத்தின் உறுப்புரிமை உடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மதிப்பீட்டாளர் ஒருவராக 05 ஆண்டுகள் அனுபவம்.

பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் மேலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் தொழில்முறையாளர்கள். அவர்களின் அனைத்து தகைமைகள் மற்றும் விபரங்கள் அடங்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, தொழில்முறை சான்றிதழ்களின் நிழல் பிரதிகளையும் உள்ளடக்கி 2026.10.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

சங்கம் நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களுக்கு உரித்தான கல்வி வலயங்களை அடிப்படையாகக் கொண்டு மேலுள்ள சேவைக்காக தொழில்முறையாளர்களை பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதால் அவர்களிடம் இருந்து சேவையை பெறுவதற்கு எதிர்பார்க்கும் மாவட்டம் மற்றும் கல்வி வலயத்தை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேலால்,

"தொழில்முறை சேவைக்காக பதிவு செய்தல் - சட்டத்தரணி" என்று சட்டத்தரணிகள் விண்ணப்பதாரர்களும், "தொழில்முறை சேவைக்காக பதிவு செய்தல் - மதிப்பீட்டாளர்" என்று மதிப்பீட்டாளர் விண்ணப்பதாரர்களும் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைமைச் செயலாளர்**

**வரையறுக்கப்பட்ட கல்விச் சேவைகள் ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கம்,**

**இலக்கம் 294, காலி வீதி,**

**கொழும்பு 03**

**தொலைபேசி: 011-2266000 Ex - 1006/ 1013**

**மின்னஞ்சல் முகவரி: edcsloansec@gmail.com**